ந.கோ.எண். 13054/ மொ.பெ./2019.

தமிழ்நாடு அரசு

<u>சுருக்கம்</u>

பொதுப் பணிகள் – அரசுப் பணியாளர்கள் – அஞ்சல்வழிக் கல்வி மற்றும் மாலைநேரக் கல்லூரிகளில் இணைவதற்கான முன்னனுமதி வழங்குவதற்குரிய கால வரம்பு – ஆணைகள் – வழங்கப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்கள் (A) துறை

அரசாணை நிலை எண். 200

நாள்: 19.4.1996

படிக்க:

1. அரசாணை நிலை எண். 328, நாள். 9.4.83, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்கள் (A) துறை.
2. அரசுக் கடித எண். 22536/84-1, நாள். 22.9.94, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்கள் (A) துறை.

------

<u>ஆணை:</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பல்வேறு பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் அஞ்சல்வழிக் கல்வியில் இணையும் அரசுப் பணியாளர், சம்பந்தப்பட்ட துறைத் தலைமையிடம் முன்னனுமதி பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை மேலும் தளர்த்தும் நடவடிக்கையாக, சம்பந்தப்பட்ட அலுவலகங்களின் வழக்கமான பணிகளுக்கு ஊறுபயக்காத வகையில் இருக்க வேண்டும் என்னும் நிபந்தனையுடன் அத்தகைய அனுமதி வழங்குவதற்கான அதிகாரம் அலுவலகத் தலைமைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

2. மேலும், அஞ்சல்வழிக் கல்வி / மாலைநேரக் கல்லூரிகளில் பயில்வதற்கு துறைத் தலைமைகள் / அலுவலகத் தலைமைகளிடமிருந்து முன்னனுமதி பெறும் நடைமுறையைத் தளர்த்தக் கோரி அரசிடம் பரிந்துரைக்கப்பட்டது. எனவே அரசு, அஞ்சல்வழிக் கல்வி / மாலைநேரக் கல்லூரி /

தனியார் கல்வியில் இணைவதற்கு முன்னனுமதி கோரி, அரசுப் பணியாளர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள், அவை பெறப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் துறைத் தலைமை / அலுவலகத் தலைமைகளால் தீர்வுசெய்யப்பட வேண்டும் என ஆணையிட்டது. அரசுப் பணியாளரிடமிருந்து ஏதேனும் விளக்கம் அல்லது விவரங்கள் கோரப்படும் நேர்வில், மேற்சொன்ன 15 நாட்கள் கால அளவானது, அத்தகைய விளக்கம் அல்லது விவரங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப்பட வேண்டும். மேற்சொன்ன 15 நாட்கள் கால அளவிற்குள், யாதொரு ஆணையும் (அத்தகைய அனுமதி வழங்கி) வழங்கப்படாத நேர்வில், அஞ்சல்வழிக் கல்வி / மாலைநேரக் கல்லூரியில் இணைவதற்கு, துறைத் தலைமை / அலுவலகத் தலைமையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட வேண்டும். ஏதேனும் தகுதியற்ற நபர், இவ்வாறு இயல்பாகப் வழங்கப்படும் கருதப்பட்ட அனுமதியைத் துய்க்கும் நேர்வில், துறைத் தலைமைகள் பொறுப்பேற்க வேண்டும்.

3. மேற்சொன்ன கட்டளையைத் தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள் மற்றும் துறைத் தலைமைகள், அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள சார்நிலைப் பணியாளர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி.எஸ். பாண்டியன்
அரசுச் செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை 9.

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை 9.

மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள் மற்றும் குற்றவியல் நீதிபதிகள் உள்ளிட்ட அனைத்துத் துறைத் தலைமைகள்.

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை 2.

பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை 104.

பதிவாளர், தமிழ்நாடு அரசு நிருவாகத் தீர்ப்பாயம், சென்னை 104.

<u>நகல்:</u>

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநர், சேப்பாக்கம், சென்னை 5.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்கள் துறையின் அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், சென்னை 9.

/ஆணையின் படி அனுப்பப்படுகிறது/

ஒம்/-

பிரிவு அலுவலர்

20/9/2019.